RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1313

# புறநானூற்றில் மானுடம்

**ரா. ராஜலெட்சுமி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது), பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Humanity in Purananooru

**R. Rajalakshmi** [a, *]

[a] Department of Tamil, Dhanalakshmi Srinivasan college of Arts and Science for women (Autonomous), (Affliated to Bharathidasan University), Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author
rajijagan87@gmail.com

Received: 30-05-2022
Revised: 23-08-2022
Accepted: 05-09-2022
Published: 19-11-2022

Check for updates

## ABSTRACT

The Purananooru Thokai is unrivaled among the Tamil treasures compiled and preserved by ancient Tamil scholars. It describes the system of rule of the kings of the Sangam age. It makes us aware of the history and culture of the ancient Tamils. The Purananuru helps us to realize the glories of public life. A closer look helps us to understand the position of the Tamils of the time in the fields of political education, ethics, science, literature, music, and fine arts. The Purananooru beautifully highlights the excellence of the Tamils of that time in qualities such as love, grace, friendship, valour, honour, and charitableness. This book highlights the greatness of Kadayezhu Vallals, poets, crowned kings, leaders of small lands, petty chiefs, poets, brave people, etc. Many songs refer to eighteen Chera kings, thirteen Chola kings, and twelve Pandya kings. The Purananooru mentions the good social life of the Tamils, political awakening, hospitality, high morality, firm principles, wearing mangal sutra, installing the middle stone, fasting during widowhood, the shortening of the meal, the burial of the dead in the thali (pot), and the climbing of the funeral pyre of the husband.

**Keywords:** Purananooru, Humanity, Thokai, Principles, Friendship.

## முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் சங்க காலம் எனப்படும். சங்க காலத்தில் தமிழில் தோன்றிய நூல்களைச் சங்க இலக்கியம் என்பர். அவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவற்றை 'மேற்கணக்கு நூல்கள்' என வழங்குவர்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)

ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறம் என்(று)

இத்திறத்த எட்டுத் தொகை."

என்னும் பழம் பாடல் எட்டுத்தொகை நூல்களைச் சுட்டுகிறது.

எட்டுத்தொகை நூல்களுள் எட்டாவது நூலாக இருப்பது புறநானூறு (Puliyur kesigan, 1958). மக்களின் புற வாழ்க்கையோடு தொடர்புடைய புறப்பொருள்பற்றிப் பாடப்பட்ட நானூறு பாடல்களைக்

கொண்ட நூலாதலின் இந்நூல் புறநானூறு எனப் பெயர் பெற்றது. பண்டைக்காலத் தமிழ் மக்களுடைய உயர்ந்த நாகரிகம் அரசியல் போர்த்திறம் சமுதாயப் பண்பாடு பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை நாம் அறிந்து கொள்வதற்குப் பேருதவி புரிவது இந்நூலேயாகும்.

## இல்வாழ்க்கை

பண்டைக்காலத் தமிழ் மக்கள் இல்வாழ்க்கையைப் பெரிதும் விரும்பியிருந்தார்கள். உண்பதற்கும், ஒழுங்காக வாழ்வதற்கும், ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவி மகிழ்வதற்கும், விருந்தோம்புவதற்கும் இல்வாழ்க்கையே சிறந்ததென்பது அவர்கள் கருத்து. யாரோடும் இனிமையாகப் பேசுதல், நடுவுநிலைமையாக இருத்தல், இயன்றவரையில் பிறர்க்கு உதவிசெய்தல், பிறர் செய்த உதவியை எக்காரணங்கொண்டும் என்றும் மறவாதிருத்தல் முதலிய நல்லியல்புகளெல்லாம் அவர்களுடைய சிறந்த கொள்கைகளாகவும், பழக்கங்களாகவும் இருந்தன.

## கல்வி

மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல கல்வியைக் கற்க வேண்டுவது இன்றியமையாததாகும். பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே

பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்

சிறப்பின் பாலாலதாயும் மனம் திரியும்

என்ற பாடலில் கல்வி கற்க வேண்டிய முறை குறித்தும், அவ்வாறு கற்றலின் பெருமை குறித்தும் எடுத்துரைக்கின்றான் (Puliyur kesigan, 1958).

## கடமை

மனிதர் பலர் ஒன்று சேர்ந்ததுதான் சமுதாயம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஒவ்வொருவரும் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர்

"ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே

சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்

களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ற பாடலில் தெளிவாக வரையறுத்துள்ளார் (Manickavasagam, 2006).

## மனித நேயம்

மனித நேயம் என்பது பிறரிடம் அன்பு காட்டுதல், பிறரையும் தன்னைப் போல் எண்ணுதல், உற்றுழி உதவுதல், ஏழைகளுக்கு இரங்குதல், பசிப்பிணி நீக்குதல் எனப்பல முகங்களைக் கொண்டது. அத்தகைய மனித நேயக் கருத்துக்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன.

பண்பாடுதான் உலகை வாழவைக்கிறது. பண்பாடு இல்லா நிலை ஏற்படுமானால் உலகம் அழியும். இதனை கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற பாண்டிய மன்னனின் பாடல் தெளிவாக விளக்குகிறது. “இந்த உலகமானது இன்னமும் உயிருடன் இயங்கிக் கொண்டிருப்பது வியப்புக்குரியதாகும்! அதற்கான காரணம் என்னவென்றால் தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்கின்ற பண்பாடு மிக்க சான்றோர்கள் வாழ்வதுதான்” என்ற பொருளமைந்த அப்பாடல் இதுதான்.

“உண்டால் அம்மஇவ் வுலகம்!

தமக்கென முயலா நோன்தாள்

பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!” (Ilankumaran, 2003)

## செல்வத்துப் பயன்

நக்கீரர் என்னும் புலவர் செல்வத்தினால் எய்தக் கூடிய பலன் என்ன என்பதை உணர்த்தும்போது,

“செல்வத்துப் பயனே ஈதல்!

துய்ப்பம் எனினே தப்புந பலவே!”

என்ற பாடலில் “செல்வத்தின் பயன் எது என்றால் ஈதலாகிய அறமே என்றும், அவ்வாறு செய்யாது தாமே துய்க்கக் கருதின் அறமும், பொருளும், இன்பங்களும் பெறப்படாவாம்” என்றும் குறிப்பிடுகின்றார் (Manikanar, 2001).

## ஈயென இரத்தல்

கழைதின் யானையார் என்னும் புலவர், “ஒரு பொருளைத் தருக என்ற ஒருவரிடத்தில் இரத்தல் இழிந்த செயலாகும். அவ்வாறு இரக்கும்போது தரமாட்டேன் என மறுத்தல் அதனினும் இழிந்த செயலாகும். தாமே விரும்பி ஒரு பொருளைக் கொள்க என்று ஒருவருக்குக் கொடுத்தல் உயர்ந்த செயலாகும். அவ்வாறு கொடுக்கும்போது கொள்ளேன் என மறுத்தல் அதனினும் உயர்ந்த செயலாகும்.” என்பதை,

“ஈயென இரத்தல் இழிந்தன்று! அதனெதிர்

ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று!

கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று! அதனெதிர்

கொள்ளேன் என்றால் அதனினும் உயர்ந்தன்று!”

என்ற பாடல் மூலம் விளக்குகின்றார் (Avvai Duraisamy pillai, 2010).

## செய்ந்நன்றி மறவாமை

ஆலத்தூர் கிழார் என்னும் புலவர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம், அறத்தைப் பற்றி விளக்குகிறார். அவனிடம் செய்ந்நன்றி என்ற பண்பின் இன்றியமையாச் சிறப்பினை வலியுறுத்த எண்ணிய புலவர், “உலகமே தலைகீழாக மாறுவதாக இருந்தாலும், ஒருவர் செய்த நன்றியை மறந்து அதனைக் கொன்று வாழ்பவருக்கு, உய்வு என்பது அறவே இல்லை என அறநூலில் கூறியிருக்கிறது!” என்று,

“நிலம்புடை பெயர்வ தாயினும், ஒருவன்

செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்என

அறம்பா டின்றே!”

என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்துகின்றார் (Nagarasan, 2007).

## நல்வழி காட்டுதல்

நரிவெரூஉத் தலையார் என்னும் புலவர், “நீங்கள் உங்கள் வாழ்வில் நல்ல செயல்களைச் செய்யுங்கள்! அஃது இயலாதாயின் தீய செயல்களைச் செய்தலையாவது தவிர்த்துவிடுங்கள்! அதுதான் எல்லோரும் விரும்புவது. அதுமட்டுமன்றி உங்களை நல்ல வழியில் செலுத்தும் வழியும் அதுதான்!” என்று,

“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்

எல்லோரும் உவப்பது! அன்றியும்

நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே!”

என்றும் பாடலில் எடுத்துரைக்கின்றார் (Gowmaareswari, 2005).

## அறிவுரை கூறுதல்

பாண்டியன் அறிவுடைநம்பி என்னும் மன்னன் குடிமக்களை வருத்தி மிகுதியான வரி வாங்கினான். அதனைக் காணப்பொறாத சான்றோர், பிசிராந்தையார் என்னும் புலவரை அவன்பால் விடுத்து நல்லறிவு புகுத்துமாறு வேண்டினர். பிசிராந்தையார் அம்மன்னனிடம் சென்று,

“காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே

மாநிறைவு இல்லதும் பன்நாட்கு ஆகும்

நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே

வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்

யானை புக்க புலம்போலத்

தானும் உண்ணான் உலகமுங் கெடுமே”

என்ற பாடல் மூலம் குடிமக்களிடம் வரி வாங்கும் முறைபற்றி எடுத்துரைத்து அறிவுரை கூறி அவனைத் திருத்துகின்றார். இப்புறநானூற்றுப் பாடல் செவியறிவுறூஉ என்னும் துறையில் அமைந்த மிகச் சிறந்த பாடலாகும் (Puliyur kesigan, 1958).

## முயற்சி

தமிழ் மாந்தர் தொழில் செய்தே பொருள்தேடும் இயல்பினர். தன் முயற்சியினால் வருகின்ற பொருளையே ஒருவன் செலவு செய்வதற்கு உரியவன் என்னும் மேன்மையான கொள்கையை அவர்கள் கடைப்பிடித்து வந்தனர். அத்தகைய அரும்பெரும் வாழ்க்கை வீரர்கள் ஒரு முயற்சியும் இல்லாமல் பிச்சையெடுத்து உண்ணும் இழிதொழிலை எள் முனை அளவுகூட விரும்பவில்லை. எனினும் ஏதொரு முயற்சியும் செய்வதற்கு இயலாத உறுப்பறைகள் (ஊனமுற்றோர்). பிணியாளர் முதலியோர் பிறரிடம் பொருள் எதிர்பார்ப்பது ஒருவாறு பொருந்தும். இன்னின்னவர் ஆதரவு பெறுவதற்கு உரியர் என்று கூற நேரும் இடங்களில்,

“சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்,

கூனும் குறளும் ஊமும் செவிடும்

மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு

எண்பேர் எச்சம் என்றிவை எல்லாம்

பேதைமை அல்லது ஊதியம் இல் என

முன்னும் அறிந்தோர் கூறினர்"

என்று புறநானூறு இவ்வுறுப்பறைகள் முதலியோரையே எடுத்துக்காட்டுகிறது (Manickavasagam, 2006).

## உலகப் பொதுநோக்கு

கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர், "எந்த ஊராயினும் அந்த ஊர் எமது ஊரே! எந்த மனிதராயினும் அந்த மனிதர் எமது உறவினரே!" என்று உலகப் பொதுநோக்கு கொண்ட பண்பாட்டை,

"யாதும் ஊரே! யாவரும் கேளீர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன

சாதலும் புதுவது அன்றே வாழ்தல்

இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்

இன்னாது என்றலும் இலமே"

என வெளிப்படுத்துகிறார் (Ilankumaran, 2003). உலகம் தமிழைச் செம்மொழியாக ஏற்று அறிவித்தல் இந்தப் பாடலுக்கும் பங்குண்டு.

## முடிவுரை

மேற்குறிப்பிட்ட பாடல்கள் தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல் புறநானூறு என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல தெற்றென விளக்குகின்றன என்பதில் எள்ளளவும் ஐயம் இல் லை. புறநானூற்றுத் தமிழரைப் போன்றே அஞ்சா நெஞ்சமும் ஆராத் தமிழ்ப்பற்றும் மறமேம்பாடும் கொடையாண்மையும் நாட்டுப்பற்றும் மானவுணர்வும் பெற்றவர்களாகத் திகழ்தல் வேண்டும். அருளும் ஆண்மையும் பண்பும் பாசமும் பாவும் பாவலரும் இசையும் இசைப்போரும் அரசும் நாடும் மக்களும் மன்னரும் அன்பும் பண்பும் உயிர்ப்புடன் விளங்குகின்ற நிலைகளைப் புறநானூற்றில் கண்டு களிக்கலாம்.

## References

Duraisamy pillai, A.S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Ilankumaran, R. (2003) Puranaanooru Moolamum Uraiyum, Tamilmann Pathippagam, Chennai, India.

Manickavasagam, Gna. (2006) Purananooru Moolamum Uraium, Uma pathippagam, Chennai, India.

Manikanar, A. (2001) Purananooru Moolam Uraiyum, Varthamanan Pathippagam, Chennai, India

Nagarasan, V. (2007) Kurunthokai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Puliyur kesigan, (1958) Purananuru, Paari niliyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License